# நாட்டுப்புறவியல் (விருந்தோம்பல் எச்சங்கள்)

# Folklore (Remnants of Hospitality)

*மு. சித்ரப்ரியா*
பகுதி நேர ஆய்வாளர்
தமிழ்த்துறை
கோபி கலை அறிவியல் கல்லூரி
கோபிச்செட்டிபாளையம், கோயம்புத்தூர்

**M. Chitrappriya**
*Part-time Researcher*
*Department of Tamil*
*Gopi Arts and Science College*
*Gobichettipalayam, Coimbatore*

*கு. நாகராஜன்*
நெறியாளர், தமிழ்த்துறை
ஈரோடு கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு

**K. Nagarajan**
*Supervisor*
*Department of Tamil*
*Erode Arts and Science College, Erode*

**Citation**: Chitrappriya, M. and K. Nagarajan. "Folklore (Remnants of Hospitality)." *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 1, 2025, pp. 37-39.

*ஆய்வுச் சுருக்கம்*

*வாய்மொழிச் சார்ந்த இலக்கியம் என்றுஅழைக்கப்படும் நாட்டுப்புற இலக்கியம் இன்றளவும் விருந்தோம்பல் பண்பினை பழங்காலம் முதல் விருந்தோம்பல் இன்றும் எஞ்சிய கூறுகளாகவும் அல்லது படிநிலை வளர்ச்சி களாகவும் உள்ளன. இவ்வாய்வின் சுருக்கம் ஆகும்.*

## Abstract

*Folk literature, which is called oral literature, still preserves the quality of "hospitality" from ancient times to the present day as surviving elements or as evolutionary developments. This is the summary of this research.*

## முன்னுரை

*நமது பண்பாடுகளில் மிகமிக முக்கியமாககருதப்படுவது விருந்தோம்பல் ஆகும். வந்தோரை வாழவைக்கும் பண்பாடுஎன்று சிறப்பு பெற்றுகிராமங்களில் வீடுகளுக்கு வரும் உறவினர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு சமைத்து பரிமாறி மகிழ்ச்சி பெற்றனர். அந்நிகழ்வு இன்றளவும் எஞ்சியக் கூறுகளாககாணப்பட்டுவருகிறது. இதனை படிநிலை வளர்ச்சி கோட்பாடுகளாககருதலாம்.*

## தமிழர் நாட்டுப்புறவியல்

*தமிழ் மக்களின் நாட்டுப்புற வாழ்வியல் கூறுகள் மற்றும் பண்பாடுகள் பழக்க வழக்கங்கள் தமிழர் நாட்டுப்புறவியல் என்றுஅழைக்கலாம். இன்றுவரை நாகரீக சமுதாயத்தில் உள்ளகல்லாத மக்கள் முதல் பழக்கவழக்கங்கள் காணப்படுகின்றன.*

## விருந்தோம்பல்

*தமிழரின் பாரம்பரிய பண்புகளில் ஒன்று விருந்தோம்பல் ஆகும். தம் வீட்டிற்கு விருந்தினராகவந்தவர்க்கு அவர் மனம் மகிழும் வண்ணம் அமுது படைத்துத் தம் பெருமையை நிலைநாட்டுவது தமிழர் மரபாகும்.*

**விருந்து-விளக்கம்**

*விருந்து என்ற சொல் புதுமை என்ற பொருளைத் தருகிறது. ஓம்பல் விருந்து செய்தல், சிறப்பு செய்தல்,முதலிய பொருளில் வழங்கப்படுகிறது.*

**உணவு விளக்கம்**

*சொல்லமைப் பின்படி நோக்கினால் உண்என்பதே அடிச்சொல்லாக அமைகிறது. உடல் நரமுற்றவனுக்கு உணவாகப் பயன்படும் கஞ்சி நோயுற்றவனுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆற்றலைத் தரும் பொருளை உணவென்று கூறுவர்.*

**விருந்து போற்றல்**

*தமிழர்களின் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கினார்கள். இல்லறத்தின் மாண்பு விருந்தோம்பல் ஆகும்.நம்மை நாடி வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உண்டி முதலியவற்றை அளித்து மிகுந்தஅன்போடும் ஆர்வத்தோடும் அவர்களைஉச்சரிப்பது வாழ்க்கையில் சிறந்த பண்பாகும்.*

**சங்கால உணவுப் பழக்கவழக்கங்கள்**

*பழக்கவழக்கம் என்று புழங்கும் தொடரே அவ்விரு சொற்களிடையே பொருள் வேறுபாடு உண்மையைப் புலப்படுத்தும் பழக்கம் என்பது ஒருவர் பழகிய முறைப்பற்றி வருவது. இப்பழக்கத்தின் விளக்கமாக,*

***சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்***
***வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்***

*எனும் வெண்பாவில்கை மற்றும் நா-வின் தன்மையை ஔவையார் தெளிவுப்படுகிறார். எனினும் அப்பாடலில் நட்பு, கொடை என்பனவற்றைப் பிறப்பால் வருவன என்பர்.*

**உணவு**

*இன்றைய வாழ்க்கைச் சூழலில் அனைத்து உயிர்களுக்கும் அடிப்படையாக அமையக் கூடிய ஒன்று. உணவு ஆகும். மனிதனுக்கு மட்டுமின்றி பறவைகள், விலங்குகள் ஆகியவற்றிற்கும் இன்றியமையாத்தாகஉணவு இருந்ததையும் இருப்பதையும் உணரலாம்.*

*ஆதி மனிதன் காய், கனி, மாமிசம் என உணவை உட்கொண்டான். பின்பு நிலத்திற்கு ஏற்றவாறு உணவு முறையானது அமைந்த போக்கினை அறிய முடிகிறது.*

***குறிஞ்சி - மலை நெல்***
***முல்லை - வரகு, சாமை, முதிரை***
***மருதம் - செந்நெல்***
***நெய்தல் - மீன், உப்பு விற்றுப் பெற்ற பொருள்***
***பாலை - பிறரிடம் இருந்து கவர்ந்த பொருள்***

**புறநானூறு**

***உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே-7।***

*உணவு மனிதனின் உயிர் நாடி, உணவு இல்லையேல் இவ்வுலகம் இல்லை. அறம், ஒழுக்கம், மேன்மை எல்லாம் அடங்கியிருக்கிறது. எனவே தான் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று கூறுகிறது.*

**குறுந்தொகை**

*குறுந்தொகைப் பாடலில் புதிய விருந்தினரின் வரவைக் கண்டு காட்டும் காக்கையின் ஒலியைக் குறித்துப் பாடிய பண்டையோர் காக்கைப் பாடினியார் என்றே அழைத்தனர்.*

***விருந்து வரக்கரைந்த காக்கையது பதியே.-90***

**திருக்குறள்**

*விருந்தோம்பலுக்கான அதிகாரத்தையே திருவள்ளுவர் படைத்துள்ளார் .*

***மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து***
***நோக்கக் குழையும் விருந்து. குறள்-90***

***வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி***
***மிச்சில் மிசைவான் புலம். குறள்-85***

***அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து***
***நல்விருந்து ஓம்புவான் இல். குறள்-84***

*முதலான குறளில் விருந்தோம்பலின் பெருமையைக் கூறுகிறார் வள்ளுவர்.*

**முடிவுரை**

*நாட்டுப்புற சமுகம் சார்ந்த எச்சமாக விருந்தோம்பல் பண்புகள் அன்றும், இன்றும் படி நிலைகளாக இருந்து வருகிறது. மானிடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதியின் மானிடவியல் கோட்பாடுகளின் மூலம் அறியலாம். காலப்போக்கில் சமுகங்களில் படிநிலை வளர்ச்சி கூறுகள் சிறிது மாறுபட்டாலும், இன்றளவும் இருந்து வருகிறது.*

**அடிக்குறிப்பு**

1. *திருக்குறள் - 90,84,85*
2. *குறுந்தொகை - 90*
3. *புறநானூறு -71*
4. *சு.சக்திவேல் நாட்டுப்புறவியல்*
5. *தமிழர் மானிடவியல்-பக்தவத்சல பாரதி - 2002*
6. *மானிடவியல் கோட்பாடு - 2012*

## References


1. S. Sakthivel - Folklore
2. Tamil Anthropology - Bhakta Vatsala Bharathi - 2002
3. Anthropological Theory - 2012
4. Thirukkural - verses 90, 84, 85
5. Kurunthogai - verse 90
6. Purananuru - verse 71